
www.tamilarangam.net

[redacted]

# மகளிர் முழக்கம்

பெண்ணடிமை விலங்குடைப்போம்!
தமிழ்த்தேசியத்திற்குத் துணைநிற்போம்!

தாய் : 1 திருவள்ளுவர் ஆண்டு 2029 கும்பம் (மார்ச்) குழவி : 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு : **தமிழ்த் தேசிய மகளிர் எழுச்சிப் பேரவை**

இதழ் நன்கொடை : உருபாய் பத்து மட்டும்

அஞ்சல் செலவுடன் ஆண்டு நன்கொடை : உருபாய் 66
(தவிர்க்க இயலாத காரணத்தினால் இனி இரண்டு மாதத்திற்கு ஒருமுறை இதழ் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்)

**ஆசிரியர் : தே.தேன்மொழி ஆசிரியர் குழு : இரா. தமிழரசி, இரா.வே. சுடர்ஒளி**

தொடர்பு முகவரி
எண். 4, புதுக்குளக்கரைச் சாலை,
ஓட்டேரி, சென்னை - 12.

www.tamilarangam.net

# 26 பேருக்குத் தூக்கு!
# நீதிமன்றம் செய்த கொலை!

1998 சனவரி 28. உலக வரலாற்றில் இதுவரை நிகழ்ந்திராத ஒரு நிகழ்ச்சி தடா சிறப்பு நீதி மன்றத்தால் நிகழ்த்தப்பட்டது.

இராசீவ் என்ற ஒருவரின் மரணத்துக்காக, 26 பேருக்கு ஒட்டுமொத்தமாக மரண தண்டனை தீர்ப்பு அளித்துள்ளது தடா சிறப்பு நீதி மன்றம்.

உலகெங்கிலும் மரண தண்டனைக்கு எதிராக கண்டனக் குரல்கள் வலுத்து வருகின்ற இந்தக் கால கட்டத்தில், 26 பேருக்கும் மரண தண்டனையை அளித்ததன் மூலம் மனித நேயத்தை மலிவாக்கும் அற்பத்தனத்தைப் புரிந்துள்ளது நீதி மன்றம்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உலகெங்கிலும் சனநாயக ஆற்றல்களும், மனித உரிமை அமைப்பினரும், பத்திரிக்கைத் துறையினரும் கண்டனச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

மனிதன் உயிர் வாழ்வதற்குரிய அடிப்படை உரிமையான வாழ்வுரிமையைப் பறிப்பதாக இத் தீர்ப்பு அமைந்துள்ளது என்று பன்னாட்டுப் பொது மன்னிப்புக் கழகம் (International Annesty) குறிப்பிட்டுள்ளது.

ஒருபுறம் மனித நேய ஆற்றல்கள் இத் தீர்ப்பைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கையில், மறுபடியும் காலம் கடந்து வந்துள்ள சரியான தீர்ப்பு என்று பார்ப்பன சோ-வின் துக்ளக் வரிந்து கட்டிக்கொண்டு மனிதநேயத்தை மறுத்த தீர்ப்புக்கு வக்காலத்து வாங்குகின்றது. இதற்கு ஒருபடிமேலே போய் தாங்கள் நடத்திய வாக்கெடுப்பில் 73% மக்கள் தீர்ப்புக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக ஆதாரமின்றி, தக்க விவரங்கள் இன்றி தனியார் தொலைகாட்சியில் தேர்தல் 98 நிகழ்ச்சியில் புளுகுகிறார் ஃபிரண்ட்லைன் ராம்.

'சத்தியமேவ ஜெயதே', 'வாய்மையே வெல்லும்' என்று சிறப்புப் புலன் ஆய்வுத் துறை காத்திகேயன் நீதிமன்றத்தின் 'அரசியல் சூழ்ச்சியான தீர்ப்புக்குப்' புளகாங்கிதமடைந்துள்ளார்.

விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரின் ஆதரவான கருத்துக்குரிய இத் தீர்ப்புக்குப் பின்னால் மறைக்கப்பட்டுள்ள உண்மைகள் ஏராளம்.

இராசீவ் அனுப்பிய அமைதிப்படை நடத்திய படுகொலைகளால் சினங் கொண்டே விடுதலைப் புலிகள் இராசீவைக் கொன்றார்கள் என்று தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பதாக சி.பு.ஆது கார்த்திகேயன் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தான் முதுகில் குத்தப்பட்டதாக தன்னிடம் பிரபாகரன் கூறினாரென்று, பாளையங் கோட்டைப் பொதுக் கூட்டத்தில் வைகோ. பேசிய உரையின் ஒலி நாடாவை ஆதாரமாகக் கொண்டு, இராசீவைக் கொல்லப் பிரபாகரனுக்கு நோக்கம் (Motive) இருந்திருக்கிறதென்று நீதிபதி நவநீதம் குறிப்பிட்டுள்ளார்.

www.tamilarangam.net

ஆக கார்த்திகேயனும், நவநீதமும் குறிப்பிட்டதிலிருந்து இத் தீர்ப்பு அரசியல் நோக்கத்தை உள்ளடக்கியது என்பது தெளிவாகின்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி அமைதிப் படையை ஈழ மண்ணில் ஏவியது இந்திய அரசு. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஏராளமான பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தி அழித்தொழிக்கப்பட்டனர். நல்ல விளைச்சல் தரக்கூடிய பொன் பூமியான ஈழ மண்ணையே சுடுகாடாக்கினர்.

இதனுடைய எதிர் விளைவே இராசீவின் மரணமென்றால், 26 பேருக்கு மரண தண்டனை வழங்கிய 'நீதிபதி' நவநீதம், அமைதிப்படையின் இத்தகைய கொடூரச் செயல்களுக்கு என்ன தீர்ப்பு சொல்லப் போகிறார்?

தடா நீதி மன்றத்தில் நடத்தப்பட்ட வழக்குகளில் பத்மநாபா கொலை வழக்கும் ஒன்று. பத்மநாபா கொலை வழக்கின் தீர்ப்பில் சிலருக்கு தண்டனை, சிலருக்கு விடுதலை. அப்படியிருக்க இராசீவ் கொலையில் மட்டும் 26 பேருக்கும் ஒட்டுமொத்தமாக மரண தண்டனை தீர்ப்பு ஏன்? பத்மநாபாவின் உயிரை விட இராசீவின் உயிர் மேலானதா?

தடாச சட்டம் நீக்கப்பட்ட பின்பும், அச் சட்டத்தின் அடிப்படையிலேயே இவ் வழக்கு நடத்தப்பட்டுள்ளது. கொடூரமான அந்தச் சட்டம் மட்டுமே நீக்கப்பட்டுள்ளது. அச் சட்டத்தின் அடிப்படையிலான கொடூரமான நடைமுறைகளை மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை என்பதையே இது காட்டுகின்றது.

தடா சிறப்பு நீதி மன்றத்தின் மூலம் வழக்கு நடந்தவிதமோ கொடுமையானது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதில் தாமதம், குற்றப்பத்திரிக்கையை தவணை முறையில் அளிப்பது, குற்றப் பத்திரிக்கையை நகல் எடுத்து உரிய காலத்தில் அவர்களுக்கு அளிப்பதில் சி.பி.ஐ.யின் திட்டமிட்ட தாமதம், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவருக்கும் தமிழ் மொழியே தாய்மொழி என்று தெரிந்திருந்தும் குற்றப்பத்திரிக்கை நகலை ஆங்கிலத்தில் அளித்தது, அதை மறுத்து தமிழில் கோரியதற்கு மொழி பெயர்த்துத் தர தாமதம் என்று பல்வேறு வகையில் கொடுமையான நடைமுறைகளைக் கடந்தே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது, சாட்சி சொல்ல வருபவர்களின் பெயர் குறிப்பிடப்படாமல் எண் மட்டுமே குறிப்பிடப்பட்டது. எதற்கு சாட்சி சொல்ல வருகிறார் என்ற விவரங்களும் அளிக்கப்படவில்லை. இவ்வாறாக நீதி மன்ற நடைமுறைக்கு மாறாக 'புதிர்' போலவே இந்த வழக்கானது நடத்தப்பட்டது. கடுங்காவல் தண்டனையை நீட்டிப்பது என்னும் திட்டமிட்ட நோக்குடனே இவ்வழக்கு நடத்தப்பட்டது. தீர்ப்பு அளிக்கப்படும் முன்னரே ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனுபவித்து விட்டனர். இதற்கு மேலும் மரண தண்டனை வேறா?

இது மூடிய அறைக்குள் (இன்காமரா) நடத்தப்பட்ட வழக்கு. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் மீதான குற்றங்கள் என்ன? அதற்கு அவர்கள் அளித்த பதில் என்ன? என்பது போன்ற வழக்கு தொடர்பான எந்தச் செய்திகளும் மக்களுக்கு தெரியப்படுத்தாதது ஏன்? தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இல்லையா?

மேலும் வழக்குக்கு ஆதாரமான பல கோப்புகள் காணாமல்(?) போய்விட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

எண். 8 / WR / JSS / 90 / VOL IIII, மற்றும் எண். 1 / 12014 / 5 / 9 - 1 - IAS / D IIII என்ற இரண்டு கோப்புகளும் மையஅரசின் தலைமை அமைச்சகத்திலிருந்து காணாமல்(?) போய்விட்டது.

www.tamilarangam.net

1014 சாட்சிகள் இருப்பதாக சி.பி.ஐ தரப்பில் சொல்லப்பட்டது. ஆனால் 288 பேரே விசாரிக்கப்பட்டுள்ளனர். மீதம் உள்ளவர்கள் விசாரிக்கப்படாதது ஏன்?

**வி.பி.சிங் அமைச்சரவையிலுள்ள வினோத் பாண்டே அளித்த வாக்கு மூலம் 30.01.92 அன்று "நான் எழுதிய குறிப்புகள் காணோம். முதல் ஐந்து பத்திகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார். இப்படிப்பட்ட பல மோசடிகளைச் செய்தே இவ் வழக்கு நடத்தப்பட்டுள்ளது. ஏன்?**

இந்த வழக்கில் வி.ஐ.பி. சாட்சிகளாக வை.கோ, காசி ஆனந்தன், ரமேஷ் பண்டாரி, இலங்கை டி.ஐ.ஜி., ஆலடி மனோகரன் உட்பட பலர் விசாரிக்கப்பட்டுள்ளனர். ஆனார் இராசீவ் காந்தியின் தமிழ்நாடு சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரலைத் தயாரித்த காங்கிரசுத் தலைவர் மார்க்ரெட் ஆல்வா, காங்கிரசுக் கட்சிக்காரர்களான மூப்பனார், செயந்தி நடராசன் போன்றோர் விசாரிக்கப்படாதது ஏன்?

மைய அரசின் உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான், செயின் ஆணையம் முன்னால் சொன்னது,

"சில அயல்நாட்டு சக்திகள் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டுள்ளன என்பதுதான் இப்போதும் என்னுடைய கருத்து. இது விடுதலைப் புலிகளின் வேலை அல்ல. வேறு ஏதோ அந்நிய சக்திகள் அவர்கள் மூலமாக இதனைச் செய்துள்ளனர் என்பதுதான் பொதுக் கருத்து."

**அப்படியெனில், அயல்நாட்டு சக்திகளின் சதிகள் பற்றித் இத்தீர்ப்பு ஏன் கண்டு கொள்ளவில்லை?**

ஆறாண்டு காலம் நடைபெற்ற வழக்கு விசாரணை, வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை அடங்கிய ஆவணங்கள் அனைத்தையும் மூன்று மாத காலத்தில் படித்து முடித்திருப்பது என்பது மனித இனத்தைச் சேர்ந்த எவராலும் செய்திருக்க இயலாது. அப்படி இருக்க நீதிபதி நவநீதம் மட்டும் படித்ததோடல்லாமல் தீர்ப்பும் எழுதி முடித்திருக்கிறாரே!?

தீர்ப்பின் முடிவு முன்னரே உறுதிப்படுத்தி விட்டதால் இதனை சாதிக்க முடிந்ததா?

இராசீவ் கொலையை ஆராய்வதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள செயின் ஆணையம், வர்மா ஆணையம் போன்றவை தங்களுடைய ஆய்வுகளை முழுமையாக முடித்து அறிக்கை அளிப்பதற்கு முன்னதாகவே இத் தீர்ப்பு அவசரமாக வழங்கப்பட்டது ஏன்?

இதுபோன்ற பல முக்கிய கேள்விகளுக்கு விடை சொல்லாமலேயே அவசர அவசரமாக ஒரு கொடூரமான தீர்ப்பு எழுதி முடிக்கப்பட்டு விட்டது.

இராசீவின் இறப்பில் நேரடி தொடர்புள்ளவர்கள் என நீதி மன்றம் கருதிய சிலரைப் பிடிக்க இயலாத நிலையிலும், சிலர் இறந்து விட்டதாலும்(?) எஞ்சியுள்ளவர்களுக்கென இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்பின் மூலம் தண்டனை பெற்றுள்ள அனைவருமே இராசீவின் மரணத்தில் நேரடி தொடர்பில்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படியிருக்க, இந்த 26 பேருக்கும் மரண தண்டனை அளிக்குமளவு இவர்கள் செய்த குற்றங்கள் என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளவை அனைத்தும் நீதி மன்றத்தின் கொடூரவியத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

* குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் சிலருக்கு, தங்குமிடங்கள் தேடிக் கொடுத்தார்களென்று இரண்டு பெண்களுக்கு (மைனர்கள்) தூக்கு தண்டனையை

www.tamilarangam.net

அளித்துள்ளது. இதில் தண்டனை பெற்றுள்ள ஒரு பெண்ணின் பெயர் ஆதிரை.

* குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் உறவினர்கள் என்பதாலேயே அவர்களுக்கும் குற்றத்தில் பங்கு உண்டென்று மனைவி, மாமனாருக்குத் தூக்கு அளித்துள்ளது.

விஜயன் என்பவரின் மனைவி செல்வக் குமாரியும், அவரது மாமனார் பாஸ்கரனும் இந்த தண்டனையைப் பெற்றுள்ளனர்.

* சாந்தி, நளினி, செல்வ லட்சுமி, பத்மா, ஆதிரை என்கின்ற ஐந்து பெண்களுக்கு முதன் முறையாக மரண தண்டனையை அளித்துள்ளது. இந்தியா சுதந்திரமடைந்த பிறகு இந்த 50 ஆண்டுகளில் பெண்களுக்கு இந்தியாவில் மரண தண்டனை அளிக்கப்பட்டதே இல்லை.

* பேட்டரி வாங்கிக் கொடுத்ததற்காகப் பேரறிவாளனும், நளினி என்பவரின் தொலை பேசி எண்ணை வைத்திருந்ததற்காக சங்கர் என்பவரும் தூக்கு தண்டனை பெற்றுள்ளனர்.

உணவு அளித்ததும், தங்குமிடங்கள் ஏற்பாடு செய்து கொடுத்ததும், கடவுச் சீட்டு இல்லாமல் பயணித்ததும், பொருட்கள் வாங்கிக் கொடுத்ததுமே இவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள். இவையே மிகக் கொடிய மரண தண்டனைக்குரிய கொடூரமான குற்றங்கள் எனில், நீதி மன்றத்தின் கொடூரவியத்தை விளக்க வேறென்ன சான்று வேண்டும்?

கொலைக் குற்றத்தில் நேரடித் தொடர்பில்லாதவர்களான இந்த 26 பேருக்குமே மரண தண்டனைத் தீர்ப்பளித்ததன் மூலம், இராசீவ் மரணத்திற்கு மிகக் கொடிய தண்டனை வழங்கப்பட்டே தீர வேண்டும் என்ற தனது வெறியைத் தீர்த்துக் கொண்டுள்ளது இந்த நீதி மன்றம்.

நீதித்துறை பயங்கரவாதத்தையே இந்தத் தீர்ப்பின் மூலம் அரங்கேற்றியுள்ளது இந்த நீதி மன்றம். அது மட்டுமல்ல, எத்தகைய கொடூரத்தையும் செய்யத் தயங்காது என்பதையும் அதற்கு அணியமாய் இருப்பதையும் செருக்கோடு இந்த நீதி மன்றம் அறிவித்துள்ளது.

இத்தகு கடுமையான தீர்ப்பின் நோக்கம், எதிர்காலத்தில் பயங்கரவியத்துக்கும், பிரிவினை வாதிகளுக்கும், யாரும் எந்தச் சிறு ஆதரவையும் அளிக்கக் கூடாது என்பதை உணர்த்துவதற்கேயாகும் என்று தனது தீர்ப்புரையில் உறுதிப்படுத்துள்ளார் நவநீதம்.

**தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களெல்லாம் நீதிபதி நவநீதத்தின் பார்வையில் பயங்கரவாதிகளும், பிரிவினைவாதிகளுமாகத் தெரிகின்றார்களோ?**

ஈழ விடுதலை ஆதரவுக் கருத்துக்கள் தமிழகத்தில் வளர்ந்து வருவதைத் தடுப்பதென்னும் நோக்குடன், இராசீவ் கொலையைப் பயன்படுத்திக் கொண்டு அச்சுறுத்தல் நடவடிக்கையாகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. தமிழ் உணர்வாளர்களுக்கும், ஈழ விடுதலை ஆதரிப்பவர்களுக்கும், சனநாயக ஆற்றல்களுக்கும் இத் தீர்ப்பு நேரடியாக எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

நீதியைத் தூக்கிலிடும் இந்த தீர்ப்பின் மூலம் நீதி மன்ற கொடூரவியத்தை தமிழக மக்களின் மீது திணித்துள்ளது. தமிழக மக்களிடையே இத் தீர்ப்பு ஒரு மாளாத் துயரை ஏற்படுத்தியுள்ளது. தகுந்த வாய்ப்புகள் உருவாகும்போதெல்லாம் மக்கள் ஆதிக்கவாதிகளின் வரலாற்றைத் தலைகீழாகப் புரட்டி போட்டிருக்கிறார்கள் என்பதே வரலாறு காட்டும் உண்மை.

**எனவே நீதிமன்ற பயங்கரவியத்தை நிலைநிறுத்தி தமிழ்த் தேசிய உணர்வுகளுக்கெதிராக எச்சரிக்கை விட்டுள்ள இந்தத் தீர்ப்பை மாற்றி மீண்டும் ஒரு புதிய தீர்ப்பை மக்கள் எழுதுவார்கள்.**

- இரா. கனல்

www.tamilarangam.net

# நமது கண்ணோட்டம்

பூடான் நாட்டில் தங்கள் குழந்தைகளை 'கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்க்கும்' அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணியை நடத்திய பெண்களுக்கு அந்நாடு தண்டனையாக சாட்டையடி கொடுத்துள்ளது.

மனித உரிமைக் கழகம் இதை எதிர்த்துக் கேள்வி எழுப்பியுள்ளது.

இஸ்லாமிய சட்டப்படி திருட்டு, மற்றும் கள்ள உறவுகளுக்குத்தான் சாட்டையடி கொடுக்கும் வழக்கம் உள்ளது. அப்படி இருக்க பெண்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த சாட்டையடி எந்த சட்டத்தில் வருகிறது?

நன்றி - பெண்மணி இதழ் -

அரசு என்பது ஒடுக்குமுறைக் கருவியே. எனவே நியாயங்களுக்காகப் போராடினாலும் ஒடுக்கும் என்பதையே இது மெய்ப்பித்துள்ளது.

'முதலாளித்துவ அரசு உழைக்கும் மக்களுக்கு எதிரானது'

'பாட்டாளி வகுப்பு அரசு சுரண்டுவோருக்கு எதிரானது'

அமெரிக்காவில், பல்வேறு குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 47 இவர்கள் பெரும்பாலும் கொலைக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள்.

மக்கள் இந்த மரண தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

அதுமட்டுமல்ல 'பெண்களுக்கு' மரண தண்டனை அளிக்கக்கூடாது என்று போராடி வருகின்றனர். இதை அமெரிக்க அரசு பரிசிலனைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

- பெண்மணி இதழ் -

சனநாயகம் கொல்லப்படும் போது அங்கு கொடூரவியம் தலை தூக்கும்.

இங்கு 26 பேருக்குத் தூக்கு என்று தீர்ப்பளிப்பதன் மூலம் சனநாயகத்தைக் கொலை செய்து நீதிமன்ற கொடூரவியத்தை உருவாக்கியுள்ளனர்.


இந்தியா ஒரு மிகப்பெரிய சனநாயக நாடாம்.

இல்லை இது ஒரு கொடூர அரசு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “பெண்களுக்கோர் அறைகூவல்!”



தோழர் கிளாரா
ஒரு புரட்சிப் புறா.
புரட்சிமய மகளிர் இயக்கத்தின் முன்னோடி.
இந்தப் புரட்சிப் புறா,
பிறந்தது செர்மன் மண்ணில்
பறந்தது மார்க்சிய விண்ணில்.

இந்தப் புரட்சிப் புறாவை
ஈன்றெடுத்து,
சாக்சனி மாநிலத்தில் உள்ள செம்னிட்ஸ் நகர்.
வரலாற்றில் என்றும் அழியாப் புகழ் மாலையைச்
சூட்டிக் கொண்ட பேறு பெற்றது.

ஈன்ற பொழுதினும் இனிதுவந்த
கிளாராவின் தந்தை எச். எய்ஸ்னர்
கிளாராவால் என்றென்றும்
நினைவு கொள்ளப்படும்
புகழாரத்தைச் சூடிக் கொண்டார்.

அது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க
‘பொன்னாள்’.
1857 - ஜூலை - 5
மகளிர் விடுதலையைப் பறை சாற்ற
கிளாரா உதித்த பொன்னாள்.

வாழ்க்கை உனக்கானது மட்டுமல்ல
எனக்கானது மட்டுமல்ல,
‘நமக்கானது’ - என்று
உழைக்கும் பாட்டாளி மக்களுக்காய்
வாழ்ந்து காட்டினார் கிளாரா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளாராவின் சமூக வாழ்க்கைக்கு
வித்திட்ட அடித்தளம்
புரட்சிமய நிகரமய மாணவர் வட்டம்
உழைக்கும் மக்களின் விடுதலை மந்திரத்தை
உதித்தெழச் செய்த மார்க்சியத்தை
உருப் போட்டுக் கொள்ளும் கூட்டத்திலிருந்து விலகி
உள் வாங்கித் தெளிவு பெற்றார்.
மனித குல வரலாற்றில், கிளாரா
மார்க்சியத்தை வாழ்க்கையாக்கினார்.

ருசிய போலந்திலிருந்து
குடி பெயர்ந்து வந்த ஓசிப் செட்கின்
தோழர். கிளாராவின் மனதில் குடியமர்ந்தார்.
மார்க்சியம் அவர்களை இணைத்தது.
மக்களுக்கான வாழ்க்கையில்,
இருவரும் வாழ்ந்தனர்.

செர்மனி உழைக்கும் மக்களின்
விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட
கிளாராவின் துணைவர்
ஓசிப் செட்கின்,
செர்மனி முதலாளி வகுப்பினருக்கு
'விரும்பத்தகாத' அயலார் ஆனார்.
புரட்சி இலக்கில் இணைந்த இருவரும்
செர்மனி ஆளும் வகுப்பு எதிரியினரால்
இணையா இணை கோடுகளாயினர்.
ஓசிப் செட்கின் நாடு கடத்தப்பட்டார்.
அரசியல் ஏதிலியராயினர் செட்கினும், கிளாராவும்.

காதலிப்பதையே இலக்காய் கொண்ட
காணாமல் காதலிக்கும்
'காதல் கோட்டை'யல்ல.
உழைக்கும் மக்களின் விடுதலையையே
இலக்காய்க் கொண்டு
காணாமலேயே உயரிய வாழ்வைக் கண்ட
புரட்சிக் காதலர்கள்.

புரட்சிமய வாழ்க்கைக்கு மட்டுமல்ல,
புரட்சிமய கட்சிகளுக்கும்
தடை அறிவிக்கப்பட்டன.
நிகரமைபர்களுக்கு எதிரான
தனிச் தடைச் சட்டங்கள் எல்லாம்
கிளாராவால் புறக்கணிக்கப்பட்டன.
தடைகளைக் கடந்து, 1881-ல்
செர்மனிய சமூக குடிநாயகக் கட்சியின்
உறுப்பினரானார் கிளாரா.
செர்மனியின் இரும்பு மனிதர்
பிஸ்மார்க்கின் தடைச் சட்டங்கள் எல்லாம்
கிளாராவின் புரட்சி செயல்பாட்டுக்கு முன்னால்
தவிடு பொடியானது.

பாட்டாளி வகுப்பு விடுதலைக்காக
1889-ல் பாரீஸ் நகரில்
எழுந்தது, இரண்டாம் அகிலம்
அந்தக் கருவை உருவாக்கிய
அமைப்பாளரில் கிளாராவும் ஒருவர்.

புரட்சிமய மகளிர் இயக்கத்தின் முன்னோடியான
கிளாரா,
பாட்டாளி வகுப்பு மகளிர் இயக்கத்தின் தேவையை
உலக அரங்கில்,
போர் உரையாய்ப் பொழிந்தார்.

பெண்,
தாயாய், மனைவியாய், உடன் பிறப்பாய்
வேண்டும் என்று விரும்புபவர்களே,
பெண், போராளியாய் வேண்டும் என்று கோருங்கள்.

குடிநாயகமில்லாக் குடும்ப உறவுகளில்
போராடிப் பட்டறிவு பெற்ற,
அந்தக் குடும்பத்துப் போராளிகளை
பாட்டாளி வகுப்பு விடுதலைக்காய்
புரட்சிக்காய்ப் போராட அழையுங்கள்.
அமைப்பாக்குங்கள்.

www.tamilarangam.net

'பெண் விடுதலையற்ற எந்த விடுதலையும் போலியானதே'
என்ற இலெனினின் கூற்றை
அறைந்து கூவினார்.
தன் குருதியைப் பாலாக்கித் தருகின்றாள்
தன் எல்லாத் தேவைகளையும், நலன்களையும்
தந்தைக்காய், கணவனுக்காய், மகனுக்காய்
ஈகம் செய்யும் பெண்,
புரட்சிக்கு செய்யும் ஈகம் அளப்பரியது
மலை முகடுகளைத் தொடும்
மாளாத் துயர் கண்டவர்கள்,
ஈகத்துக்கு மற்றொரு பெயர் பெண்கள்
இவர்கள், குடத்திலிட்ட விளக்காகி விடக் கூடாது,
பாட்டாளி வகுப்பு விடுதலைப் போரில்
சுடும் பரிதிச் சுடர்களாக்கப்பட வேண்டும் என்று
முதல் முறையாக,
புரட்சிக்கு மகளிர் பங்காற்ற
உரக்கக் குரலிட்டார் கிளாரா.

கிளாராவின் முயற்சியாலேயே
புரட்சிமய நிகரமையப் போராட்டத்தில்
பெண்கள் அணி திரட்டப்பட்டனர்.
1890-ல் எர்ஃபர்ட் மாநாடு
உழைக்கும் மகளிர் விடுதலைக்கான
மகளிர் திட்டத்தை முன் வைத்தது.

முதலாளிய மகளிர் இயக்கம்
சில சலுகைகளுடன்,
பெண்களை சமரசப்படுத்திக் கொண்டது.
அது பெரும்பான்மையான
உழைக்கும் மகளிர்க்கு
எப்போதும் எதிரானதே என்று
கிளாரா இதை எதிர்த்து
சமரசமற்றுப் போராடினார்.

சலுகைகள்,
பிச்சைக்காரர்களை உருவாக்கும்!
அடிமை வேரை ஊன்றச் செய்யும்!

www.tamilarangam.net

புரட்சியே
பேராளிகளை உருவாக்கும்
விடுதலையை ஈன்றெடுக்கும் - என்று
முதலாளியிய மகளிர் இயக்கங்களின்
சீர்திருத்தவியத்தை அம்பலப்படுத்தினார்.
தனியுடைமைச் சமூக அமைப்பு
தகர்க்கப்படும் போதே
உழைக்கும் மக்கள் விடுதலைக் காற்றை சுவாசிப்பர்
அந்த விடுதலையோடே தான்
பெண்களும்,
விடுதலை வாழ்வைப் பெற முடியுமென்று
அறிவியல் அடிப்படையிலான திட்டத்தை
'சமநிலை' என்ற இதழின் மூலம்
எழுத்துப் புரட்சி படைத்தார்,
இதழாசிரியர் கிளாரா.
அவ்விதழ், பெண்களின் விழிப்புணர்வுக்கும்,
அமைப்பாக்கலுக்கும், போராடுதலுக்கும்
ஒரு போர்க்கருவியாய்த் திகழ்ந்தது.

1908 மார்ச்சு 8 - நியூயார்க்
போர்க் களம் கண்டது.
அந்தப் போர்க் களத்தின்
தலைமைத் தளபதிகள் பெண்கள்.
ஆம், அமெரிக்க நிகரமைய மகளிர் இயக்கத்தினர்
நியாயமான கூலி, எட்டு மணி நேர வேலை
பெண்களுக்கான வாக்குரிமை உட்பட
மனித உரிமைகள் கேட்டுப் போராடினர்.
அடிமைத்தனத்துக்கு எதிராக
பெண்கள் அமைப்பாகப் போராட
அறை கூவிப் போராடிய நாள்
அந்நாளை, மகளிர் நாளாக
அறிவிக்கச் செய்தார் கிளாரா.

பொதுவுடைமைக் கட்சி மட்டுமே
பெண்களுக்கான இந்த நாளை
அறிவிக்க முன் வந்தது.
ஏனென்றால், சமூக சமநிலை

www.tamilarangam.net

குமுகாயப் புரட்சியுமே
அதன் இறுதி இலக்கு.
எனவே, சமரசமின்றி
பெண்களின் விடுதலையை - அது
பறை சாற்றியது.
1910-ல், உலகத் தொழிலாளர் பேராயம்
மார்ச்சு 8 ஐ
உழைக்கும் மகளிர் நாளாக
அறிவிக்கை செய்தது.

33 ஆண்டுகள் அயராதுழைத்து
புரட்சிமய மகளிர் இயக்கத்தைக் கட்டமைத்தார்
ஹிட்லரின் இரண்டாம் உலகப் போருக்கெதிராகப்
போராட உலகெங்குமுள்ள
பெண்களை அமைப்பாக்கினார்.

மண் விடுதலையோடே பெண் விடுதலையென்று - கூவிய
இந்த செர்மனின் புரட்சி புறா
மார்க்சிய விண்ணில் பறந்து
மாஸ்கோவில் 1933 ஜுன் 20-ல்
தன் புரட்சி வாழ்க்கைப் பயணத்தை
முடித்துக் கொண்டது.

அந்த புரட்சிப் புறாவின் சிந்தனைகள்
இன்று, தமிழக மண்ணிலும்
சிறகு விரிக்கின்றது.
இந்தியப் பார்ப்பனியச் சிறையில்
அடிமையாய்த் தமிழ்த் தேசம்
பார்ப்பனிய ஆணாதிக்கக் கொடுரெளியில்
அடிமையாய்க் கட்டுண்டு கிடக்கும்
தமிழ்த் தேசத்துப் பெண்கள்.

இங்கு பெண்களின் அடிமை உருவங்கள்
புதிய பிரம்மாக்களால்,
கற்பனைக்கும் எட்டாத வகையில்
படைக்கப்பட்டிருக்கின்றன.

www.tamilarangam.net

பிரஷர் குக்கராய், பட்டர் பிளை ஸ்டவ்வாய்
சிகரெட்டாய், ஷேவிங் மெஷினாய்
சந்தையில் விலை பொருளாக்கப்பட்டாள்.

தாலியாய், மெட்டியாய்
பொட்டாய், பூவாய்,
குடும்பத்துக் குத்து விளக்காய்
அழகுப் பதுமையாக்கப்பட்டாள்.
கட்டிலறையும், தொட்டிலறையும்,
சமையலறையும் மட்டுமே
அவள் கண்ட உலக அதிசயங்கள்.

பாலியல் வன்முறை,
சாதி மத அடக்குமுறை,
ஆபாச சீரழிவு என்று
ஏவப்படும் ஏவுகணைகளால்
சல்லடையாய்த் துளைக்கப்பட்ட பின்னும்
உயிரோடிருக்கிறாள்.
பெண்ணாய் அல்ல அடிமையாய்.

இந்த அடிமைத்தனத்துக்கெதிராக
அடிமைப் பெண்கள், போராடி
அடையப்பட வேண்டிய வெற்றிஇலக்கு ஒன்றுண்டு.
'பெண் விடுதலை' அதற்கு,
பெண்கள் அமைப்பாக வேண்டும்.
மார்ச்சு - 8
நமக்குக் கற்றுக் கொடுத்ததும் அதுவே.
கிளாராவின் வழியில்,
புரட்சிமய மகளிர் இயக்கம்
தமிழக மண்ணில்
கட்டமைக்கப்பட வேண்டும்.

இப் பணியை, வெற்றியடையச் செய்வதே
ஒவ்வொரு பெண்ணின் கடமையாகும்.

பெண்களே!
'அடிமைத் தளையை அறுத்தெறிய
அமைப்பாக ஒன்றிணைய அணி திரள்வோம்'. - தே. தேன்மொழி

www.tamilarangam.net

# மூனா

"அம்மா– தாயி–"

வெளியே எட்டிப் பார்த்தேன். ஒரு நான்கு அல்லது ஐந்து வயது சிறுவன் அழுக்காய் நின்று கொண்டிருந்தான். இந்த வயதிலேயே பிச்சை எடுக்க வேண்டிய அவலமா? மனதை வேதனை கவ்வ,

"என்னடா வேணும், சாப்பாடா? பாத்திரம் எங்க?" என்றேன்.

"இல்லையே, எடுத்திகிட்டு வரல, பசிக்குதுக்கா–" என்றான்.

துறு துறுப்பாய் இருந்தான். பசிப்பதை கூட சிரிப்புடன் சொன்னான். பார்த்தவுடன் அந்தப் பையனை பிடித்திருந்தது. புத்திசாலிதனமான தோற்றம். பிச்சை எடுப்பது பற்றிய கவலையே தெரியாத சிரித்த முகம். சிரிக்கும்போது கன்னத்தில் குழிவிழுந்து அது அவனுக்கு மேலும் அழகூட்டியது. அந்த சிரிப்பு முகம் பளிச்சென்று மனதில் ஒட்டிக் கொண்டது.

"அம்மா இங்க வாங்களேன். ஒரு பையன் வந்திருக்கான். சாப்பாடு வேணுமாம். தட்டு எடுத்துட்டு வரல. நம்ம தட்டுல போடட்டுமா?"

"யாரு எங்கேயிருந்துடா வர்றே? தட்டு எங்க?"

"ம் நாங்க அங்க இருந்து வர்றோம்". தொலைவில் கை காட்டினான்.

"உன் அப்பா அம்மா எங்க?"

"அங்க மரத்துக்கு அடியில் எல்லாரும் இருக்குறாங்க"

அவன் கைகாட்டிய திசையில் குப்பை மேட்டுக்கருகில் உள்ள பெரிய புளிய மரத்தடியில் 20 அல்லது 25 பேர் மூட்டை முடிச்சுகளுடன் இருந்தனர். நாடோடி கூட்டம் என்று புரிந்தது. அந்தப் பகுதியை சுற்றித்தான் எங்கள் ஊர் குழந்தைகள் கழிப்பிடமாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதற்குள் சிலர் அங்கு பாய் விரித்து படுத்திருந்தனர். மரக்கிளையில் கட்டப்பட்ட தூளி ஒன்றில் பாதி உடம்பு வெளியே தொங்கிக் கொண்டு ஒரு குழந்தை கத்திக் கொண்டிருந்தது. அதுபற்றி யாரும் கவலைபட்டதாக தெரியவில்லை.

எங்கள் ஊரில் அடிக்கடி நாடோடிகள் இப்படி வந்து கொஞ்ச நாள் தங்கிவிட்டு செல்வது வழக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஓடு ஓடிப்போய் தட்டு எடுத்துகிட்டு வா சாப்பாடு தர்றே"ன்னு அம்மா சொன்னதும், வாயிலேயே டுர்ருன்னு சத்தமிட்டு வண்டி ஓட்டிகிட்டு ஒரே ஓட்டமாய் ஓடினான்.

சிறிது நேரத்தில் கையில் தட்டுடனும் அவன் தங்கையையும் அழைத்துக் கொண்டு வந்தான்.

"டேய் உன்ன வரச்சொன்னா உன் தங்கச்சியையும் கூட்டிக்கிட்டு வந்துட்டியா? சரி சரி திண்ணையில வந்து உட்காருங்க. சாப்பாடு போடறேன். இங்கேயே சாப்பிட்டுட்டு போயிடுங்க. அங்க போனா கும்பல்ல உங்களுக்கு என்ன கிடைக்குதோ".

அம்மாவுக்கு இரக்க குணம் அதிகம். அம்மா மட்டுமல்ல பொதுவுடைமை கருத்துக்களை உடைய குடும்பம் என்பதால் எங்கள் குடும்பமே மனிதாபிமானம் மிக்கது. அந்த ஊரிலேயே எங்கள் குடும்பத்திற்கென்று தனி மரியாதை இருந்தது.

முற்போக்கு கருத்துடையவர்கள் என்பதால் சரியாக இருப்பார்கள் என்று எங்களைப்பற்றி ஊருக்குள் பேச்சு. அதில் எங்களுக்கு பெருமையும் கூட.

அந்தப் பையன் சாப்பிட்டு முடித்து வந்தான்.

"அக்கா அது என்னா?" என் கையிலிருந்த எழுதுகோலையும், தாளையும் சுட்டிக்காட்டி கேட்டான்.

"எழுதிகிட்டு இருக்கேன். இது பேனா, இது பேப்பர். உனக்கு எழுத தெரியுமா? பள்ளிக்கு போயிருக்கியா?"

"ஊகும் போகலையே, ஆனா எழுதுவேன். குடுக்கறியா?"

பள்ளிக்கு போகாம எப்படி எழுத தெரியும்? ஆச்சரியத்துடன் வெளியே வந்து எழுதுகோலையும், தாளையும் கொடுத்தேன். ஆவலுடன் வாங்கி கோடு கோடாய் போட்டு கிறுக்கிப் பார்த்தான். முட்டை முட்டையாய் போட்டான். ஏதோ ஓவியம் வரைபவனின் முக பாவனையில் அங்கும் இங்குமாய் கோடு போட்டான். பெருமையாய் என்னைப் பார்த்தான். எனக்கு சிரிப்பாய் வந்தது.

"அழகா வரையிற, பரவாயில்லையே" என்றேன். அம்மாவையும் அவன் கவர்ந்திருந்தான் போலும்.

அம்மா வந்து "தினமும் இங்க வாடா. நீ மட்டும் வாடா சாப்பாடு போடறேன் சரியா" என்றார்கள். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. துள்ளலுடன் தலையாட்டிவிட்டு ஓடினான்.

அன்று முதல் தினமும் வருவான். இரவில் அவன் வந்தாலே தெருவில் பாய் விரித்து அனைவரும் போய் அமர்ந்து கொள்வோம். நிறைய பேசுவான். அவனை கதை சொல்ல சொல்லிக் கேட்க அனைவருக்கும் ரொம்ப பிடிக்கும். கதை சொல்லும் போது அவன் கண், வாய், கை, கால், உடம்பு ஒவ்வொன்றும் நமக்கு கதை சொல்லும். புதுசு புதுசா அவனே கதை சொல்லுவான்.

அவன் கதையில் அவன்தான் கதாநாயகன்.

www.tamilarangam.net

"நான் ரயிலுல போவும்போது வாயபயம், லட்டு, ஜாங்கிரி எல்லாம் நிறைய சாப்பிட்டேனே. ஏரோபிளேன்ல கூட போயிருக்கேன். எவ்ளோவ் பெரிசு தெரியுமா? நறையா பேர் படுத்து தூங்கலாம் தெரியுமா? அதுல கக்கூசு கூட இருக்குதுக்கா. நான் பாத்தேனே, நான் போவும் போது எங்கப்பாரு புதுச் சொக்கா, தொப்பி, கண்ணாடி எல்லாம் வாங்கி கொடுத்துச்சே"

இதுபோலவேதான் அவனது ஒவ்வொரு கதையும்.

அவனுடைய கதைகள் எல்லாமே பெரிய அளவிலேயே இருந்தன. பிறந்தது முதல் இதுவரை அடுத்தவர்கள் கொடுத்த உடையன்றி ஒரு நாளும் புதுத்துணியணியாத இவனுள் எவ்வளவு கனவுகள்... கற்பனைகள்... ( என் தங்கை அம்மாவிடம் தினமும் கதை கேட்கும் போது அம்மாவே திணறிப்போவது நினைவுக்கு வந்தது)

மாணிக்கம் ஆம் அதுதான் அவன் பெயர். சிறிது நாட்களிலேயே எங்களுக்கு நெருங்கிய தோழனாகி விட்டான். குளித்தால்தான் எங்க வீட்டுக்கு வரனும்னு சொன்னதால தினமும் குளித்துவிட்டு வர ஆரம்பித்தான். அப்பா அவனுக்காகவே தின்பண்டங்கள் ஏதாவது தினமும் வாங்கி வருமளவுக்கு நெருங்கிப் போனான்.

எங்கள் தெருவில் இருப்பவர்கள் அம்மாவிடம், "ஒரு பிச்சைக்கார பயலுக்கு இவ்வளவு உரிமை கொடுக்கலாமா?" சோத்த தட்டுல போட்டு அனுப்பறதை விட்டுட்டு திண்ணையில உட்கார வைச்சு உங்க பையன மாதிரி பாத்துக்கறீங்க? ஏதாவது திருடிட்டு ஓடிடப்போறான்" என்றார்கள்.

"சீ.. சீ எப்படி திருடுவான்? நாமதான் கூடவே இருக்கோம்ல? அதுவுமில்லாம அவனும் ஒரு மனுஷன்தானே? சின்னப்பையன் வேற, பாவம் அவன். இந்த வயசிலேயே பிச்சை எடுக்கனுங்கற நிலை. இந்த ஊருல இருக்குற வரைக்குமாவது அடுத்த வேல சோத்துக்கு என்ன வழின்னு யோசிக்காம இருக்கட்டுமே. ஏதோ நம்மளால முடிஞ்சது செய்வோமே" என்றார்கள்.

"இருந்தாலும் உங்க பெருந்தன்மை யாருக்கும் வராதுங்க. அதிசயமானவங்கதான் நீங்க. பிச்சைக்கார பயலுக்கு வாழ்வுதான்" என்றார்கள், அம்மா சிரித்துக் கொண்டார்கள்.

''இன்னிக்கு என்ன இன்னமும் மாணிக்கத்தைக் காணும்?'' கேட்டுக் கொண்டிருக்கும்போதே வந்துவிட்டான்.

"நான் வந்துட்டேன், அக்கா இன்னிக்கு கப்பல் கதை சொல்றேன் வா" - வரும்போதே துள்ளலும் கூச்சலுமாய் வந்தான்.

கதையெல்லாம் அப்புறம் சொல்லலாம். தோட்டத்துக்கு வா. அக்கா உனக்காக இளனி வெட்டி வைச்சிருக்கா. வந்து சாப்பிடு" உள்ளிருந்து அம்மா குரல் கொடுத்தார்கள்.

"ஹைய்யா எளனியா தோ வர்றேன்"னு எகிறி ஒரு குதிகுதித்து விட்டு குடு குடுவென்று வீட்டிற்குள் ஓடி வந்தான்.

www.tamilarangam.net

"டேய்... டேய் நில்லு வீட்டுக்குள்ள ஓடிவரக் கூடாது. அந்த வழியா வா". அவசரமாய் அவனைத் தடுத்து நிறுத்தி அம்மா சொன்னார்கள்.

சடக்கென்று நின்றான். மூஞ்சி தொங்கி போய்விட்டது. மெல்ல ஏறிட்டு என்னை சில வினாடிகள் பார்த்தான். பிறகு ஒன்றும் பேசாமல் சோர்ந்த நடையுடன் சந்து வழியா போனான். அம்மாவும் இளனி கொடுக்க போய்விட்டார்கள்.

என்னது இது, அம்மா அப்படிச் சொல்லியிருக்க கூடாது. சின்னக் குழந்தை எவ்வளவு குஷியா வந்தான். சுருங்கி போய்ட்டானே அவனோடவே ஒட்டிப்பிறந்த அவன் அழகிய சிரிப்பு அப்படியே காணாம போயிடுச்சே. வார்த்தைக்கு வார்த்தை தொண தொணன்னு பேசறவன் ஏன் ஒன்னுமே பேசாம போனான்? இந்த வயசுல அவனுக்கு இது எந்த மாதிரி யோசிக்கத் தோணும்? ஒருவேளை இதுமாதிரி அவனுக்கு பழகியிருக்குமோ? இது பெரிய அளவுல பாதிச்சிருக்காதோ? பலவித சிந்தனைகளுடன் அமர்ந்திருந்தேன்.

மாணிக்கம் சாப்பிட்டுவிட்டு வந்தான். குற்ற உணர்வுடன் அவனைப் பார்த்து லேசாக சிரிக்க முயன்றேன்.

சிரிப்பில்லாத முகத்துடன் என்னை சிறிது நேரம் பார்த்தான்.

"நீ மட்டும் வூட்டுக்குள்ளாரதான நடக்குற. என்னை மட்டும் ஏன் சந்து வழியா வரச் சொல்றாங்க? ஏன் நான் வூட்டுக்குள்ள வரக் கூடாதா? ஏன்க்கா? - சவுக்கடியாய் அவனிடமிருந்து கேள்விகள்.

இப்படிப்பட்ட கேள்விகள் இவனுள் தோணுதா? மௌனமாய் நின்றேன். சாப்பாடு கூட போடாம விரட்டி அடித்தவர்களையே பார்த்து பார்த்து பழகிப்போன அவனுக்கு இப்படிப்பட்ட கேள்விகள் தோன்றியிருக்கிறதே எப்படி?

அம்மாவை பார்த்தேன். அம்மா முகம் வெளிறிப் போயிருந்தது. அவர்களும் ஒன்றும் சொல்லவில்லை.

மாணிக்கம் போய்விட்டான்.

"ஏம்மா பதில் சொல்லல?"

"இல்ல அழுக்காயிருந்தான்..." ஏதோ சமாதானப்படுத்த முயன்று முடியாமல் மௌனமாகி விட்டார்கள்.

காலங்காலமாய் ஊறிவந்த சமூக சீர்கேடுகள் தன்னையறியாமல் தன்னிடமும் நீண்டிருப்பதை உணர்ந்தார்கள்.

பகுத்தறிவு பேசினாலும் தனக்குள்ளும் தீண்டாமை சம்மணமிட்டு அமர்ந்திருப்பதை எண்ணி வருத்தப்பட்டார்கள்.

சம்மட்டி அடி கொடுத்த மாணிக்கம் சிறிது நாட்களில் எங்கள் ஊரை விட்டு எங்கோ சென்று விட்டான். நாங்கள் மட்டும் எப்போதாவது இன்னமும் அவனைப்பற்றி பேசிக் கொண்டிருப்போம்.

- இரா.வே. சுடர்ஒளி

www.tamilarangam.net

# பெண்களின் பார்வையில் தேர்தல் களம்

* ஒவ்வொரு தேர்தலின் போதும் 'சிறப்பு கவனம்' பெண்கள் மீது காட்டப்படும்.
* மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள மகளிர்,, அரசியல் கட்சிகளின் 'வாக்கு வங்கிகளாக' மட்டுமே போற்றப்பட்டு வந்துள்ளார்.
* ஆட்சிக்கு சென்ற பின்பு, பெண்களை மறந்து விடுவதால் பெண்களின் நலனுக்கென எப்போதுமே சட்ட, திட்டங்கள் உருவாக்கப்படுவதில்லை.
* சட்ட, திட்டங்களைத் தீட்டும் சட்ட மன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் 5 சதவிகிதம் கூட பெண்கள் இடம் பெறவில்லை என்பது 'போலி சனநாயகத்தை'யே அம்பலப்படுத்துகின்றது. மேலும் பெண்களின் சமூக அவல நிலையை தெளிவாக உணர்த்துகின்றது.
* பெண்களுக்கெதிரான சட்டங்கள் இன்று வரை நடைமுறையில் உள்ளன. அவை இன்று வரை நீக்கப்படவே இல்லை.
* பெண் கல்வி, பெண் குழந்தைகள் நலன், பெண்கள் நலன் என்று எதை எடுத்துக் கொண்டாலும் சரி, அவற்றுக்கான முழுப் பலனைக் கொடுக்கக் கூடிய திட்டங்கள் இதுவரையிலும் இல்லை.

பெண்களின் மீது ஆதிக்கத்தை செலுத்தி அடிமைத்தனத்தை நிலை நிறுத்தும் பார்ப்பனிய இந்திய அரசைக் கட்டிக் காப்பாற்ற அரசியல் கட்சிகள், மக்களின் ஒப்புதலைப் பெற நடத்துவதே தேர்தல் நாடகங்கள். அந்த நாடகங்களின் வரிசையில் தற்போது பனிரெண்டாவது மக்களவைத் தேர்தல் நாடகம் அரங்கேறியுள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் ஒப்போலை இட்டுத் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகள், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில்லை என்பதே மறுக்கப்பட முடியாத உண்மை. குறிப்பாக பெண்களுக்கென்று இந்த 50 ஆண்டு காலத்தில் எதையுமே சாதித்ததில்லை என்பது இந்த ஆதிக்க அரசமைப்பை அம்பலப்படுத்துவதாகவே உள்ளது.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திப் பேசிய பிரதமர் உரையின்போது, இடை மறித்து சனதாதள தலைவர் சரத் யாதவ் அதை எதிர்த்து ஆவேசமாகப் பேசினார். (26-1-98 தினமணி)

பெண்களுக்கான இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கூட அங்கீகரிக்க முடியாத நிலையிலேயே இங்கு 'சனநாயகம்' உள்ளது என்பது அவமானகரமானது.

பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திய நாளிலிருந்து, அதை நிறைவேறாமல் தடுப்பதையே அரசியல் கட்சிகள் தமது நோக்கமாகக் கொண்டிருந்தன. செயந்தி நடராசன், ரேணுகா சௌத்ரி, ரத்ன மாலா சாவனா உட்பட நான்கு பெண் எம்.பி.க்கள் மத்திய அமைச்சரவையில் இணை

www.tamilarangam.net

அமைச்சர்களாக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வலியுறுத்திப் பேசியும், இச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. இதிலிருந்து 'பெண்களின் அரசியல் நுழைவை' எந்தளவுக்கு இக் கட்சிகள் வரவேற்கின்றன என்பது புரியும்.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. நாளையும் நிறைவேற்றப்படாது என்னும் நிலையே தொடர்கின்றது.

மாபெரும் போராட்டங்களைப் பெண்கள் அமைப்புகள், நாடெங்கும் நடத்தினால் ஒருவேளை அரசியல் கட்சிகளின் மனநிலையில் மாற்றம் வரலாம் என்று தினமணி கதிர் குறிப்பிடுகின்றது.

இந்த ஆதிக்க பார்ப்பனிய இந்திய வல்லரசிய அமைப்பிலிருந்து எந்த உரிமைகளையும் பெற்றுவிட முடியாது என்பதை முதலாளித்துவ நிறுவனங்கள், பத்திரிக்கைகளே ஒப்புக்கொள்ளும் உண்மையாக உள்ளன.

தேர்தல் வாக்குறுதி என்ற அடிப்படையில் எல்லாக் கட்சிகளுமே 33% இட ஒதுக்கீட்டை அளிப்பதாக உறுதி கூறியிருந்தன. அந்த உறுதி மொழிகள் எல்லாமே 30 கோடி பெண்களின் வாக்குகளை அடிப்படையாக வைத்தே கூறப்பட்டன.

பெண்கள் அரசியலில் பங்கேற்பதை விரும்பாத, அதை அனுமதிக்க கிஞ்சிற்றும் மனமில்லாத ஆணாதிக்கமே எல்லா அரசியல் கட்சிகளின் மனதிலும் நீக்கமற நிறைந்துள்ளது என்பதே உண்மை.

மக்களவையிலும், சட்டப் பேரவையிலும் 33% பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கத் தயங்குகின்ற, இக்கட்சிகள் பெண்களின் நலனுக்காக எதை சாதிக்கப் போகின்றன, தண்ணீரில் எழுதிக் கொள்ளும் உறுதி மொழிகளை வேண்டுமானால் ஒவ்வொரு தேர்தலின் போதும் தவறாமல் ஒப்பேற்ற முடியும் என்பதைத் தவிர வேறில்லை.

543 உறுப்பினர் கொண்ட கடந்த மக்களவையில் 39 பெண்கள்தான் இடம் பெற்றிருந்தனர். அது கூட நடிகைகள், உறவினர்கள் (பிரபலங்கள்) என்ற வகையில் சில அரசியல் கட்சிகள் பெண்களுக்கென சில இடங்களை அளித்திருந்ததாலேயே 39 பேராவது இடம்பெறும் நிலை ஏற்பட்டது. ஆனால் இவை அக் கட்சியினரின் அரசியல் சுய இலாபத்துக்காகவே அளிக்கப்பட்டது என்பது வெட்ட வெளிச்சமாகிப் போன உண்மையாகும். எனவேதான் எந்தக் கட்சியுமே இப்போது 33% அடிப்படையில் பெண் வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

பெண் உறுப்பினர்களில் பலர் போதிய கல்வியோ, அரசியல், சமூக விழிப்புணர்வோ பெற்றிடாமல் உள்ளனர். இதனால் கணவன்மார்களின் அல்லது நெருங்கிய உறவினர்களின் 'ரப்பர் ஸ்டாம்ப்' ஆகவே உள்ளனர்.

பிகாரில் இராப்ரி தேவியின் ஆட்சியைப் பற்றி லல்லு பிரசாத் குறிப்பிடும்போது,

'என்ன இருந்தாலும் பெண்தானே. என்னைப்போல் ஆட்சி செய்ய முடியாது. வீட்டு வேலைகளில் வேண்டுமானால் நிர்வாகத் திறன் பெற்றவராக இருக்கலாம்' என்கின்றார்.

பெண் என்பதாலேயே அரசியல், சமூகப் பணிகளுக்குத் தகுதியற்றவர்கள் என்ற ஆணாதிக்கக் கருத்தின் வெளிப்பாடே இது.

காலம் காலமாகவே பெண்களுக்கான பணிகள் வீட்டுப் பணிகள், குடும்பப் பொறுப்பு என்று மட்டுமே தீர்மானிக்கப்பட்டு இருப்பதால், பெண்களை அரசியல் அரங்குக்குள் நுழைய விடாமல் கதவடைத்து வைத்துள்ள சமூக அமைப்பு இது. எனவே பெண்கள் அரசியல் களத்தில் தங்கள் காலடிகளைப் பதிக்க இயலவில்லை.

www.tamilarangam.net

முதலாளித்துவ அரசமைப்பைப் பொருத்தவரை, இதைக் கட்டிக் காப்பாற்றஉவதற்கு பொருத்தமான பகராளி ஆணாயினும், பெண்ணாயினும் அவர்களை ஏற்றுக்கொள்ளும். அந்த வகையில் பொருளாதாரம் மற்றும் அரசியல் பின்புலம் பெற்ற சில பெ்கள் அரசியல் அரங்கை எட்டிப்பிடித்துள்ளனர். இந்திரா காந்தி, சோனியாகாந்தி, மேனகா காந்தி, செயலலிதா, மமதா என்ற இந்தப் பெண்கள் அனைவருமே அரசியல் பின்புலம், மற்றும் பொருளாதாரத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள மேட்டுக்குடிப் பெண்களே.

முதலாளித்துவ அரசமைப்பில் பெண் இரண்டாம்தரக் குடிமக்களே. எனவேதான் பெருவாரியான உழைக்கும் பெண்கள் முதலாளித்துவ அரசமைப்பில் பங்கேற்க முடிவதில்லை.

பெண்கள் அரசியலில் பெருவாரியாக பங்கேற்கும் போதே தமக்கான அனைத்து உரிமைகளையும் பெற முடியும். எனவே பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது போராடிப் பெற வேண்டிய ஒன்று என்பது சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் போராட்டத்தின் பாதையில் பெண்கள் பல கட்டங்களைக் கடக்க வேண்டியுள்ளது.

அரசயல் கட்சிகளால் பெண்கள் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில், மக்களவைக்கு முதன் முறையாக மகளிர் அமைப்புகள் சார்பில் ஒரு வேட்பாளர் நிறுத்தப்பட்டார்.

மகளிர் பிரச்சினை தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை நடத்தி இருக்கும் சேவை அமைப்பின் நிறுவன இயக்குநரும் அகில இந்தியப் பெண்கள் 'தக்ஷக சமிதி'யின் தலைவருமான ரஞ்சனா குமாரி இத் தேர்தலில் சுயேச்சையாக தில்லியில் போட்டியிட்டார். இவருக்குப் பல்வேறு மகளிர் அமைப்புகளின் ஆதரவைத் திரட்டும் பணியில் பெண்களுக்கான தேசியக் கமிஷன் தலைவர் மோகினி கிரி ஈடுபட்டார். இவையெல்லாம் பெண்கள் அரசியலில் பங்கேற்பதைப் புறக்கணிப்பதால் நடக்கின்ற நிகழ்வு மட்டுமல்ல, பெண்கள் அரசியலில் பங்கேற்க வேண்டியதன் காலக் கட்டாயத்தை உணர்த்துவதாகும்.

அரசியலில் பெண்கள் பங்கேற்க இயலாத இந்தச் சூழலை மாற்றியமைக்கவே இன்று போராட வேண்டியுள்ளது. பெண்கள் அரசியலில் பங்கு பெற இயலாமைக்கு கல்வியறிவின்மை, வறுமை போன்ற தடைக் கற்களும் உள்ளன. இது காலம் வரை தேர்ந்தெடுத்து அனுப்பும் அரசியல் கட்சிகள் இவற்றைக் கூட பெற்றுத் தந்ததில்லை. இந் நிலையில் பெண்கள் அரசியலில் பங்கேற்பது எப்படி சாத்தியம்?

மாடும், தாழ்த்தப்பட்டவனும், பெண்ணும் தீண்டத்தகாதவர்கள் என்ற பெண்களுக்கெதிரான பார்ப்பனியச் சட்டத்தை நிலைநிறுத்தும் பார்ப்பனிய இந்தியாவை கட்டிக் காப்பாற்றும் அரசியல் கட்சிகள் ஒரு போதும் 'பெண்ணடிமைத் தனத்துக்கெதிரான' செயல்பாடுகளில் ஈடுபடப் போவதில்லை. அது மட்டுமல்ல, ஒரு ஆதிக்க அரசமைப்பிலிருந்து எந்த உரிமைகளையும் போராடாமல் பெற்றுவிடவும் முடியாது.

இத்தகு நிலையில், ஆதிக்கக் கருத்தாக்கத்தினை நிலை நிறுத்தும் பார்ப்பனிய இந்திய வல்லரசியத்தின் அரசமைப்பை எதிர்த்துப் பெண்கள் போராட வேண்டியுள்ளது. அரசியலில் பெண்கள் பங்கேற்க பங்கு தர மறுக்கும் இந்த அரசியல் கட்சிகளுக்கும் பெண்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்? ஆக பெண்களின் பார்வையில் தேர்தல் களம் என்பது, பெண்கள் பெரும்பான்மையாக அரசியலில் பங்கேற்பது புறக்கணிக்கப்படும் வரை, பெண்களும் தேர்தலைப் புறக்கணிப்பார்கள் என்பதே ஆகும்.

**- சிந்தாமணி**

# மடல்!

**பாபு - கோவை**

தேர்தல் திருவிழா கட்டுரை. தமிழர் புத்தாண்டு கட்டுரைகள் சிறப்பு. ஈழப் பெண்கள் கவிதை எழுச்சியை விதைக்கிறது. இதழ் முழுவதும் அரசியல்க் கட்டுரைகளாக வருவதை விட பெண்களின் பிரச்சினையில் உள்ள அரசியலை விளக்கப் படைப்புகள், கவிதை, கட்டுரை, புள்ளி விவரங்கள், சிறு செய்திகள் என வருவது நலம்.

**ஜ. பச்சைமால் - நாகர்கோவில்**

மகளிர் முழக்கம் பெற்றேன். துணிவான காலத் தேவையான முயற்சி. இதழ் அமைப்பு நன்றாக இருக்கிறது. உள்ளடக்கம் நல்ல 'சூடு'தான். தமிழ் மகளிர்க்கு உத்வேகம் கொடுக்கும் கட்டுரை, கவிதை அதிகம் வெளியிடுக.

**பரிதி ஏகனா புரம்.**

முழக்கம் நிச்சயம் அறை கூவல் விட்டு அழைக்கும். ஈழப் பெண்கள் கவிதை, பெண்களின் காதில் சென்று கவிபாடும். கட்டுரைகள் சிறப்பு. தேவையான இடங்களில் புரட்சிக் கவிஞர், பெருஞ்சித்திரனார் ஆகியோரின் பாடல்களையும் இணைத்திருப்பது ஒரு கவுரவத்தைக் காட்டுகிறது.

**முகவை முனியாண்டி 'கல்வெட்டு பேசுகிறது' - ஆசிரியர்.**

விடுதலைப் பாதையில் பெண்கள் அடிமை நிலை உணர்தல், எதிர்த்துப் போராடுதல், அமைப்பாக்குதலை களப் பணியாகக் கொள்ளும் முழக்கம் உரத்து ஒலிக்கிறது.

விடுதலை ஓசை விண்முட்டும் வரை ஒலிக்க உங்கள் இதழ் போர் முரசு கொட்டிட எனது அன்பான வாழ்த்துக்கள்.

**திருச் செல்வி - கோவை**

எளிய முறையில் புரிந்து கொள்ளும் வகையில் கட்டுரைகள் அமைந்திருந்தது. கவிதை சிறப்பாக இருந்தது. இதழ் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. பெண்களின் அடிமைத்தனத்திற்கும், சாதி ஒடுக்குமுறைக்கும், தேசிய விடுதலைக்கும் உள்ள தொடர்பை மையப்படுத்திய கட்டுரைகள் இடம் பெற வேண்டும். கதைகளும் இடம் பெற வேண்டும்.

**நபிசத்.**

தமிழக மக்களின் அரசியல் விடுதலை, தமிழ் மொழி விடுதலை, தமிழ் மண் விடுதலை, தமிழகப் பெண்கள் விடுதலை, ஆம், இதழ், விடுதலை முழக்கமாகவே வந்துள்ளது.

தமிழகப் பெண்களின் விடுதலை பற்றிப் பேசும் எத்தனையோ ஏடுகள் முதலாளித்துவத்தோடு சமரசம் செய்து கொண்டே பேசுகின்றன. முதலாளித்துவத்தோடு சமரசம் செய்து கொண்டு பெண் விடுதலை பெற முடியாது. உண்மையான பெண் விடுதலை வர்க்கப் போராட்டத்தில்தான் வர முடியும். அதன் முதல் படியாக மகளிர் முழக்கம் அமைந்திருக்கிறது.

www.tamilarangam.net

# சுமைதாங்கி!

பிறந்தவுடன்
'பெண்' என்ற இழிவைச் சுமந்தோம்!
பள்ளிப்பருவத்தில்
பெண் என்று
தள்ளிவைத்த கவலை சுமந்தோம்!

கல்லூரிப் பருவத்தில்
கானல் கனவுகளைச் சுமந்தோம்!
வெட்கப்பட்டு வேடம்போட்டு
தாலியைச் சுமந்தோம்!

கல்லானாலும் கணவனென்று
நெஞ்சில் சுமந்தோம்!
பிள்ளை பெறும் இயந்திரமானதில்
கருவைச் சுமந்தோம்!

தலைமுதல் கால்வரை அணிகலன்களுடன்
பார்ப்பனிய பண்பாட்டைச் சுமந்தோம்!
ஆண்களுக்கென்று என்றும்
அடிமை வாழ்வைச் சுமந்தோம்! - இதுவரை,
★ இனியும் சுமப்போம் - இவைகளை,
உடைத்தெறியும் போர்வாளை!

- சா.சு. கவிதா.

சரண்டல் தன்மையுள்ள அடிமைப்படுத்தும் முதலாளித்துவ சமுதாயத்தில் எல்லாவிதமான சீர்திருத்தங்களுமே வெறும் ஒட்டு வேலையாகத்தான் இருக்கின்றன. அவை பெண்களின் பிரச்சனைகளுக்கோ அல்லது சமுதாயப் பிரச்சினைகளுக்கோ எந்தவிதமான தீர்வையும் முன் வைக்கவில்லை. முதலாளித்துவ மகளிர் இயக்கத்தின் 'இறுதி நோக்கம் சீர்திருத்தங்களே'

– சர்வதேச கம்யூனிச மகளிர் இயக்கம்


பாட்டாளி மகளிர் இயக்கத்தின் முன்னோடி கிளாரா ஜெட்கின்.